கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com



ஞானம் 5 – ஒலி 23
05-06-2022



## விண்ணேற்பு
## அவ்வளவு சுலபமல்ல...

தலையங்கம்



# தன்னை விடுவித்துக் கொள்பவரையே இந்த பிரபஞ்சம் விடுவிக்கும்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான ஞான ஒலி என்னும் இணைய, மற்றும் ஒலி வடிவ வார இதழின் வாசக நண்பர்களே உங்கள் அனைவருக்கும் என் என் அன்பான வணக்கங்கள்.

ஒருமுறை ஆப்பிரிக்காவில் நடந்த ஒரு சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு சிறு பகுதியை ஓர் இரக்கமற்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் சர்வாதிகாரி. வடிகட்டின மகா சுயநலக்காரன். தான் ஒரு கடவுள் என்றும், அனைவரும் தன்னை வணங்கவேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்திருந்தான். எல்லா மக்களையும் அடிமைகளாக நடத்தினான்.

மக்கள் சிறு தவறு செய்தாலும் அவர்களை கொடுமையாகத் தண்டிப்பதும், கொல்வதும் வழக்கம். அதற்காகவே அவன் பத்து காட்டு நாய்களை வளர்த்து வந்தான். யாராவது அவனின் விருப்பத்திற்கு மாறாக மாற்றுக் கருத்து கூறினால், அல்லது அவனுக்குக் கீழ்ப்படியாவிட்டால் அவர்களை அந்த நாய்களுக்கு இரையாகப் போட்டுவிடுவான்.

அந்த அரசனுக்கு ஓர் உதவியாளர் இருந்தான். அவனுக்கு மிகவும் உண்மையாகவும், அன்பாகவும் பணிவிடை செய்து வந்தான். ஒரு நாள் அந்த அரசன் விரும்பிய உணவை தயாரித்துக் கொண்டுவர சற்றுத் தாமதமானதால், பெருந்தீனிக்காரனான அவன் கடும் கோபமுற்று தனது வீரர்களை அழைத்து அந்த உதவியாளனை தான் வளர்த்துவரும் காட்டு நாய்களுக்கு இரையாக போடுங்கள் என்று கட்டளையிட்டான்.

அப்போது அந்த உதவியாளன், அரசனைப் பார்த்து, அரசே உங்களது கட்டளைக்குக் கீழ்ப்படிகின்றேன். ஆனால், எனது கடைசி ஆசையை நிறைவேற்றுங்கள் என்று அவனிடம் கேட்டான். என்ன அந்தக் கடைசி ஆசை என்றதற்கு, அரசே நான் சாவதற்கு முன் ஒரு பத்து நாட்கள் நீங்கள் வளர்க்கும் அந்த காட்டு நாய்களுக்கு உணவளிக்கவும், அவற்றைக் குளிப்பாட்டி பாராமரிக்கவும் எனக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டான்.

அதற்கு அந்த அரசன், எப்படியும் நீ சாகத்தான் போகிறாய், சரி பத்து நாட்கள்தானே, போய் அந்த நாய்களைப் பார்த்துப்கொள் என்று அனுமதி தந்தான்.

ஏற்கெனவே அந்த நாய்களைப் பாராமரித்த பணியாளனிடம் அந்த அரச உதவியாளன் தனது ஆசையைக் கூறவே, அவனும், சரி பத்து நாட்கள் நாமும் ஓய்ந்திருக்கலாம் என்ற ஆசையில் அவனை அந்த நாய்களைப் பாராமரிக்க அனுமதித்தான்.

அவன் அந்த பத்து நாட்களும் நாய்களை மிகவும் அன்போடு பராமரித்தான், உணவளித்தான், குளிப்பாட்டினான். அவற்றோடு மிகவும் அன்பாகப் பழகினான். அவையும் இவன் மீது மிகுந்த அன்பு வைத்தன. அவனோடு கொஞ்சி விளையாடின. அவன் எங்கு சென்றாலும் அவை அவனோடவே சென்றன. அவனும் அவற்றோடவே படுத்துறங்கினான். அவனும் அந்த நாய்களும் இணைபிரியாத நண்பர்களானார்கள்.

அரசன் அனுமதித்த பத்து நாள் கெடுவும் முடிந்தது. அவனை இழுத்துவந்து அந்த நாய்களுக்கு இரையாக போடுங்கள் என்று அரசன் கட்டளையிட்டான். அவன் முன்னிலையில் அந்த நாய்களுக்கு அவனை உணவாகப் போட்டார்கள். ஆனால் அந்த அரசன் நினைத்ததற்கு மாறாக அந்த நாய்கள் அவனிடம் கொஞ்சி விளையாடியதைப் பார்த்த அரசன், ஆச்சரியத்தோடு, என்ன இது? அந்த நாய்கள் அவனைக் கொல்லவில்லையே? ஏன்? என்று ஆச்சரியப்பட்டான்.

அப்போது அந்த உதவியாளன், அரசே அந்த நாய்களை ஒரு பத்து நாட்களாகத்தான் பராமரித்தேன். அவை எனது அன்பை, நான் செய்த பராமரிப்பை உணர்ந்து என்னைக் கொல்லாது என்னை அன்பு செய்கின்றன. அந்த ஐந்தறிவு கொடூர நாய்களுக்கும் கூட எனது பாசம் புரிந்திருக்கின்றது.

ஆனால், நான் இருபது வருடங்களுக்கு மேலாக உங்களுக்கு நான் மிகவும் அக்கறையோடு பணி செய்தேன். என்னைவிட உங்களைத்தான் மிகவும் அன்பு செய்தேன். ஆனால், நான் செய்த ஒரே ஒரு சிறு தவறுக்காக என்னை இந்த நாய்களுக்கு இரையாக்கத் துணிந்துவிட்டீர்கள். நான் செய்த நன்மைகள் எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களே என்றான். அவ்வாறு அவன் சொன்னவுடன். அந்த அரசன் தன் தவறை உணர்ந்து மனம் வருந்தினான். தான், அந்தக் கொடூர காட்டு நாய்களைவிடவா மோசமானவன், எனக்கு இருக்க வேண்டிய மனிதத்தன்மை அந்த நாய்களிடம் இருக்கின்றது. ஆனால், மனிதனாகிய எனக்கு இருக்கவேண்டிய மனிதத்தன்மையையே இழந்து மிருகத்தனமாக இவ்வளவு காலமாக நான் வாழ்ந்திருக்கின்றேனே என்று வெட்கித் தலைகுனிந்தான்.

தனது மிருகத்தன்மையை விட்டுவிட்டு நல்ல மனிதனாக மாறினான். அவனை தன் பணியாளனாக மீண்டும் ஏற்றுக் கொண்டான். அந்த பத்து காட்டு நாய்களை காட்டுக்கே அனுப்பிவிட்டான். அதன்பிறகு அவன் அனைவரும் விரும்பும் நல்ல அரசனாக, அதைவிட நல்ல மனிதனாகவும் வாழ்ந்து வந்தான்.

அவனின் அந்த மனமாற்றம் மக்கள் மத்தியிலே அவனுக்கு பெரும் மதிப்பைக் கொடுத்தது. அன்பும், மன்னிப்பும், பிறருக்காக வாழ்வது எவ்வளவு ஆனந்தமானது என்பதை ஒவ்வொரு நாளும் அனுபவித்து வாழ்ந்தான்.

இந்த பாஸ்காக் காலம் 7ம் ஞாயிறன்று ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்புப் பெருவிழாவைக் கொண்டாடினோம். மனிதர்களை பாவத்திலிருந்தும் சாவிலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுவித்த பிறகு, எல்லாம் நிறைவேற்றிவிட்ட மனநிறைவில், இயேசு மீண்டும் தன் பரலோகத் தந்தையிடம் இறைமகனாகத் திரும்பி விண் சென்றார்.

கீழான மனநிலைகளைவிட்டுவிட்டு மேன்மையான மனநிலையில் வாழ ஆரம்பிக்கின்றபோது நாமும் விண்ணேற்றம் அடைகின்றோம் என்பதை நினைவில் கொள்வோம். அந்த அரசன் தனது அக்கிரமமான, மக்கள் விரோத கொடுங்கோல் வழிகளை விட்டுவிட்டு நல்ல அரசனாக மாறியபோது அவன் விண்ணேற்றம் அடைந்தான்.

விட்டுப் கொடுக்கும் போதும், மன்னிப்பு கேட்கின்றபோதும், மன்னிக்கின்ற போதும், பொறுமையாக இருக்கும் போதும், அஹிம்சை வழியில் நடக்கும் போதும், பிறருக்காக எதையும் தியாகம் செய்யும் போதும், பிறர் நல்வாழ்விற்காக உழைக்கின்ற போதும், தானம் செய்யும் போதும்... நாம் விண்ணேற்பு அடைகின்றோம்.

வாழ்வின் இதுபோன்ற மதிப்பீடுகள் நம்மை மேன்மையை நோக்கு அழைத்துச் செல்கின்றன. இவை அனைத்தும் நமக்கு பேரிழப்புகளைத்தான் தரும். உலகம் விரும்பும் பெருமைகள் அனைத்தையும் நம்மிடமிருந்து அகற்றிவிடும். ஆனால் விண்ணக மகிமையால் நம்மை நிரப்பும். அதுவே மீட்பு. இறைமக்களின் மாண்பு.

இயேசு சிலுவையில் அரை நிர்வாணமாக அனைத்தையும் இழந்தது போல, இந்த உலகப் பெருமைகள், வெகுமதிகள், கௌரவமான அனைத்தையும் இழந்தால் மட்டுமே, நாம் இயேசுவோடு விண்ணேற்றம் அடைய முடியும்.

ஒரு சிறிய செடி விருச்சமாக வளர தனது முன்னைய நிலைகளை, இழந்து கொண்டே இருப்பதுபோலத்தான் நமது விண்ணேற்பும் இருக்கின்றது. தேவையற்றதை இழக்கும்போதுதான் வளர்ச்சி சாத்தியமாகும்.

இருளிலிருந்து ஒளிக்கும்
சாவிலிருந்து வாழ்வுக்கும்
பாவத்திலிருந்து புனித்தத்திற்கும்
அழிவிலிருந்து நிலைவாழ்வுக்கும்
உயர்வதே விண்ணேற்றம்

இதைத்தான் புனித சின்னப்பர் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் மேன்மையான வழிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறுகிறார். ஒருகாலத்தில் இயேசுவின் சீடர்களை கொன்று குவித்த அவர். இறுதியில் உண்மையை அறிந்து அந்த அரக்க அரசனைப்போல மனம் மாறி கிறிஸ்துவக்காகத் தன் வாழ்வையே முழுமையாக வழங்கி,எந்த கிறிஸ்துவத்தை அழிக்க நினைத்தாரோ, அதே கிறிஸ்துவை புற இனமக்களிடம் கொண்டு சேர்த்தார். அதற்காக அனைத்தையும் குப்பையெனக் கருதினார். இயேசுவையே தனது ஒப்பற்ற செல்வமாகக் கருதினார். அவரே, அத்தகைய வழியை நமக்கு இவ்வாறாகக் கற்றுத் தருகின்றார்.

இறுதியாக, சகோதர, சகோதரிகளே,
உண்மையானவை எவையோ
கண்ணியமானவை எவையோ
நேர்மையானவை எவையோ
தூய்மையானவை எவையோ
விரும்பத்தக்கவை எவையோ
பாராட்டுதற்குரியவை எவையோ
நற்பண்புடையவை எவையோ
போற்றுதற்குரியவை எவையோ
அவற்றையே மனத்தில் இருத்துங்கள்
– பிலிப்பியர் 4:8

கடவுளின் ஆவி
உங்களுக்குள் குடி கொண்டிருந்தால்,
நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல்,
ஆவிக்குரிய இயல்பைக்
கொண்டிருப்பீர்கள்…
கிறிஸ்து உங்களுள் இருந்தால்,
நீங்கள் கடவுளுக்கு
ஏற்புடையவர்கள் ஆக்கப்படுவீர்கள்.
அதன் பயனாகத் தூய ஆவி
உங்களுக்குள் உயிராய் இருக்கும்…
கடவுளின் ஆவியால்
இயக்கபடுகிறவர்களே
கடவுளின் மக்கள்
– உரோமையர் 8:9, 10, 14





# விவிலியம் அறிவோம் - 41

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## தீனா கற்பழிக்கப்படுதலும் அதன் விளைவுகளும்

தொடக்கநூல் 34 வது பிரிவு யாக்கோபின் மகளான தீனாவைக் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. தீனா யாக்கோபின் ஒரேமகள். அவரது முதல் மனைவியான லேயாவுக்குப் பிறந்தவள். தீனா ஒரே மகள் என்பதால் யாக்கோபும், அவரது புதல்வர்களான, தீனாவின் சகோதரர்களும் அவள் மேல் மிகுந்த பாசம் கொண்டிருந்தனர் என்பதில் சந்தேகமில்லை. இந்தப் பிரிவு தொடங்கும் போது, யாக்கோபுக்கு லேயா பெற்றெடுத்த மகளான தீனா அந்நாட்டு மகளிரைப் பார்க்க வெளியே புறப்பட்டுப் போனாள் என வாசிக்கிறோம். அவள் தனியாக வெளியே செல்லும் செயல் நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் பார்க்கப்படுகிறது. தீனா எதற்காகத் தனியே வெளியே செல்கிறாள்? அவள் எந்தக் கபடமும் இல்லாமல் தங்களைச் சுற்றி வாழ்பவர்களை அறிந்துகொள்வதற்காக வெளியில் செல்கிறாளா? அந்நாட்டு மகளிருடன் நட்புறவு கொள்வதற்காகச் செல்கிறாளா? தனது சுதந்திரத்தை வெளிப்படுத்தும் விதத்தில் வெளியில் செல்கிறாளா? தனக்கென ஒரு துணையைத் தேடிச் செல்கிறாளா? போன்ற கேள்விகள் எழுகின்றன. தீனா வெளியில் செல்லும்போது தன் வீட்டின் பாதுகாப்பைவிட்டு வெளியே வருகிறாள். எனவே அவளது செயல் சரியான செயலாகப் பார்க்கப்படவில்லை.

தீனா அந்நாட்டு மகளிரைப் பார்ப்பதற்காக வெளியே செல்கின்றாள்; ஆனால் அந்நாட்டின் தலைவனான ஆமோரின் மகன் செக்கேம் அவளைக் காண்கின்றான். செக்கேம் இவ்வியர் எனப்படும் இனத்தைச் சார்ந்தவன். இவ்வியர்கள் கானான் தேசத்தில் மலைநாட்டில் குறிப்பாக, எருசலேமுக்கு அருகில் அமைந்துள்ள கிபயோனிலிருந்து (யோசுவா 9:1-7) செக்கேம் வரையுள்ள பகுதிகள் மற்றும் வடபகுதியில் அமைந்துள்ள எர்மோன் மலைப்பகுதியில் (யோசுவா 11:3,நீத 3:3) வாழ்ந்தவர்கள். இவ்வியர்களின் தோற்றம் பற்றிய செய்திகள் எதுவும் விவிலியத்தில் இல்லை. ஆனால் அவர்கள் இத்தியர்களுடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. தீனா தனியாக வெளியே செல்வது அவளது துணிச்சலையும் அச்சமின்மையையும் வெளிப்படுத்துவது போல் இருந்தாலும் அவள் செக்கேமின் ஆசைக்குப் பலியாகின்றாள். நிகழ்வுகள் வேகமாக நடக்கின்றன. அவள் வெளியே செல்கின்றாள், செக்கேம் அவளைக் காணுகின்றான், அவளைத் தூக்கிச்சென்று அவளுடன் உறவுகொள்கின்றான். பண்டைய மேற்காசியநாடுகளில் விரும்புகின்ற ஒரு கன்னிப ;பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்கு அவளைக் கட்டாயப்படுத்தி அவளோடு உறவுகொள்வது ஒரு வழிமுறையாகக் கையாளப்பட்டிருக்கிறது. அசீரியர்களின் சட்டங்களிலும், இத்தியர்களின் சட்டங்களிலும், விப 22:16-17 மற்றும் இச 22:28-29 பகுதிகளிலும் இதற்கான சட்டங்கள் இருப்பதைப் பார்க்கமுடிகிறது. இந்தச் சட்டங்களைப் பார்க்கும்போது கன்னிப் பெண்ணின் விருப்பமில்லாமல் கட்டயாப்படுத்தி அவளுடன் உடலுறவு கொண்டவன் அவளுக்கு மனைவிக்கான பரியம் கொடுத்து அவளைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும். சுஶ்ரீல நேரங்களில் அவன் அவளை மணமுறிவு செய்வதும் மறுக்கப்படுகிறது. மனைவிக்கான பரியம் கொடுப்பதென்பது மணமகனின் குடும்பம் மணமகளின் குடும்பத்திற்கு கொடுக்கின்ற பணத்தைக் குறிக்கிறது. மணமகளின் குடும்பம்



சமூகத்தில் உயர்ந்ததாக கருதப்பட்டால்; பரியம் அதிகமாகக் கொடுக்கப்படும். அதைப்போல மணமகள் அழகுள்ளவளாக இருந்தாலும் அவளுடைய மதிப்பு உயரும். நூசி என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆவணங்களின் படி முப்பதிலிருந்து நாற்பது செக்கெல் வெள்ளி பரியமாக கொடுக்கப்பட்டது என்பதை அறியவருகிறோம்.

தீனாவை கட்டயாப்படுத்தி உறவுகொண்ட செக்கேம் அவளை மணக்க விரும்புகின்றான். எனவே தீனாவின் மனத்தை ஈர்ப்பதற்காக அவள்மேல் காதல் கொண்டு அவளைக் கவரும் முறையில் பேசுகிறான். அதன்பின் தன் தந்தை ஆமோரிடம், இந்தப் பெண்ணை எனக்கு மணமுடித்து வையுங்கள் என்று கேட்கின்றான். விளைவுகளும் வேகமாக நடக்கின்றன. தீனா சிறுமைப்படுத்தப்பட்டாள் என்ற செய்தி யாக்கோபை எட்டுகிறது. அவர் அமைதி காக்கிறார். அவரது புதல்வர்கள் புல்வெளியில் மந்தைகளோடு இருந்தது அந்த அமைதிக்குக் காரணமாகக் கூறப்படுகிறது. யாக்கோபின் இந்த முடிவு வித்தியாசமானதாக உள்ளது. ஏனெனில் அவரது முந்தைய செயல்களை ஆய்வு செய்தால் அவர் தெளிவான முடிவுகளை எடுத்துச் செயல்படுபவராகப் பார்க்கிறோம். மிகவும் இக்கட்டானச் சூழ்நிலைகளிலும் தெளிவான பார்வையைக் கொண்டவராகத்தான் அவரைச் சந்திக்கிறோம். இங்கே அமைதிகாப்பதும் ஒரு உத்தியாகக் கருதப்பட வாய்ப்பிருக்கிறது. யாக்கோபு தனது மகன்களுக்குச் செய்தி அனுப்புகிறார். புல்வெளிகளில் மந்தைகளுடன் இருந்த அவர்கள் விரைந்து வீட்டிற்கு வருகிறார்கள். அவர்கள் துயரமும் கடும் சீற்றமும் கொண்டனர் என வாசிக்கிறோம். செக்கேமின் செயல் அவர்களைக் கடும் கோபத்திற்குள்ளாக்கியிருந்தது. தங்கள் சகோதரியை செக்கேம் சிறுமைப்படுத்தியதை அவர்களுக்கு ஏற்பட்ட அவமானமாக அவர்கள் பார்க்கின்றனர்.

இந்தநேரத்தில் செக்கேமின் தந்தை ஆமோர்; யாக்கோபுடன் பேசவருகிறார். அவர் யாக்கோபிடம், என் மகன் செக்கேமின் மனம் உங்கள் மகள்மீது ஈர்க்கப்பட்டுள்ளது. ஆவளை அவனுக்கு மணமுடித்துத் தாருங்கள் எனக் கேட்கிறார். தொடர்;ந்து அவர் பேசுகையில் மூன்று காரியங்களைக் குறிப்பிட்டுப் பேசுகிறார். முதலாவதாக, வேறுவேறு இனத்தவரான அவர்கள் திருமண ஒப்பந்தத்தால் ஒன்று கூடிவாழலாம். ஒருவருக்கொருவர் பெண் எடுத்தும் பெண் கொடுத்தும் கலப்பு மணம் செய்வதன் வழியாக ஒற்றுமையுடன் வாழலாம். இரண்டாவது, இஸ்ரயேல் மக்கள் அந்தநாட்டில் தங்கியிருப்பதற்கும், வணிகம் செய்து, செல்வம் சேர்ப்பதற்கும் இதனால் வழிபிறக்கும். மூன்றாவதாக, உங்கள் பெண்ணை மண முடித்துத் தருவதற்கு பணமும் பரிசமும் எவ்வளவு வேண்டுமானாலும் தருவதற்குத் தயராக இருக்கிறோம் எனக் கூறுகிறார். ஆமோர் யாக்கோபிடம் பேசுவது அனைத்தையும்



யாக்கோபின் புதல்வர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் எதிர்வினை இன்னும் வெளிப்படவில்லை. அவர்களின் இதயங்களில் எழுகின்ற சிந்தனைகளை அறிந்துகொள்வது கடினமாக உள்ளது. ஒன்று மட்டும் தெரிகிறது. அவர்கள் கடும் கோபத்தில் இருக்கிறார்கள். ஆமோரின் வார்த்தைகள் அவர்களின் கோபத்தை மாற்றியதாகத் தெரியவில்லை.

தங்கள் சகோதரியைச் செக்கேம் தீட்டுப்படுத்தியதால் அவர்கள் பழிவாங்கத் துடிக்கின்றனர். எனவேதான் அவர்கள் கபடமாய் பேசுகின்றனர். அவர்களின் பேச்சு இரண்டு உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. முதலாவது, விருத்தசேதனம் செய்வதை தங்கள் அடையாளமாகப் பார்க்கின்றனர். விருத்தசேதனம் செய்துகொள்ளாத ஆண் மகனுக்கு தங்கள் சகோதரியைக் கொடுப்பது அவமானம் எனக் கருதுகின்றனர். இரண்டாவதாக, தீனாவைத் திருமணம் செய்துகொள்ள விரும்பும் செக்கேமும் மற்றும்; அவரது இனத்தைச் சேர்ந்த ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம் செய்துகொண்டால்



தங்கள் இனப்பெண்களை இவ்வியர்களுக்குக் கொடுத்து அவர்களின்; பெண்களை தங்கள் ஆண்கள் திருமணம் செய்வதை அனுமதிக்கலாம் எனக் கூறுகின்றனர். இவ்வாறு செய்வது அவர்கள் ஓரினமாக வாழ்வதற்கு வழிவகுக்கும் எனக் கூறுகின்றனர். விருத்தசேதனம் இஸ்ரயேல் மக்களின் அடையாளம் என்பது தொடக்கநூல் 17 வதுபிரிவில் வெளிப்படுகிறது. பண்டைய மேற்காசிய நாடுகளில் விருத்தசேதனம் பரவலாக கடைபிடிக்கப்பட்டது; ஆனால் எல்லா மக்களும் கடைபிடிக்கவில்லை. இவ்வியர்களான செக்கேமின் மக்கள் விருத்தசேதனம் செய்துகொள்ள உடன்படுகின்றனர். அதன் வழியாக இஸ்ரயேல் இனப் பெண்களை அவர்கள் திருமணம் செய்துகொள்ள முடியும் என நினைக்கின்றனர். யாக்கோபின் புதல்வர்களைப் பொறுத்தவரை, தங்கள் சகோதரியை செக்கேமுக்கு மணமுடித்து வைப்பது அவர்களின் நோக்கமாகத் தெரியவில்லை. சமயக் கோட்பாடுகளை கடைபிடிப்பதும் அவர்களின் நோக்கமல்ல. மாறாக, செக்கேமின் ஆள்களை தங்கள் வலையில் விழவைப்பதுதான் நோக்கமாகத் தெரிகிறது.

ஆமோரும் செக்கேமும் தீனாவின் சகோதரர்கள் கேட்பதற்கு உடனே உடன்படுகின்றனர் அதனால் ஏற்படும் விளைவுகளை அவர்கள் அறிந்திருந்தார்களா என்பது தெரியவில்லை. இதை அவர்கள் ஒருசமயச் சடங்காகக் கருதினார்களா? ஒரு அரசியல் உத்தியாகப் பார்த்தார்களா? அல்லது ஒரு சமரசமாகப் பார்த்தார்களா? ஆசிரியர் எதையும் திட்டவட்டமாகக் கூறவில்லை. இதனால் ஏற்பட இருக்கின்ற பொருளாதாரப் பலன்களை அவர்கள் மனதில் கொண்டு இதற்கு ஒத்துக்கொண்டிருக்கலாம். ஏனெனில், அப்படிச் செய்தால் அவர்களுடைய மந்தைகள், சொத்துக்கள், அனைத்துக் கால்நடைகள் ஆகியன நமக்குரியன ஆகுமன்றோ! எனவே நாம் அவர்களுக்கு ஒப்புதல் கொடுப்போம். அவர்களும் நம்முடன் குடியிருக்கட்டும் என செக்கேம் நகரவாசிகளிடம் ஆமோரும் செக்கேமும் கூறுவது இதற்கு ஆதாரமாக உள்ளது. செக்கேம் நகரமக்கள் இந்த

ஒப்பந்தத்திற்குச் சம்மதிக்கிறார்கள். அவர்கள் அனைவரும் விருத்தசேதனம் செய்கின்றனர்.


மூன்றாம் நாளன்று அவர்கள் அனைவரும் வலியால் வருந்தியபோது, யாக்கோபின் புதல்வர்களும் தீனாவின் சகோதரர்களுமான சிமியோன், லேவி என்னும் இருவரும் அவரவர் வாளை எடுத்துக் கொண்டு, சந்தேகம் எழாதபடி நகருக்குள் புகுந்து அனைத்து ஆண்களையும் வெட்டி வீழ்த்தினர். அவர்கள் ஆமோரையும், அவன் மகன் செக்கேமையும் வாளினால் வெட்டி வீழ்த்தியபின் தீனாவை செக்கேம் வீட்டினின்று அழைத்து வருகின்றனர். அதன்பின் யாக்கோபின் ஏனைய புதல்வர்கள் வந்து செக்கேம் நகரைக் கொள்ளையடித்து, தீக்கிரையாக்குகின்றனர். அவர்கள் ஏன் அவ்வாறு செய்தார்கள் என்பதற்கான காரணத்தை ஆசிரியர் வெளிப்படுத்தவில்லை.

யாக்கோபு இறுதியாக தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறார். சிமியோனையும் லேவியையும் அவர் அதட்டுகிறார். தன்னை அவர்கள் ஏளனப்படுத்திவிட்டதாக கூறுகிறார். தீனாவைச் செக்கேம் சிறுமைப்படுத்தியதைப் பார்க்கும் விதத்தில் யாக்கோபும் அவருடைய புதல்வர்களும் வேறுவேறு நிலைகளைக் கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது. யாக்கோபின் புதல்வர்களைப் பொறுத்தமட்டில் தீனா கற்பழிக்கப்பட்டதை அவமானமாகக் கருதுகின்றனர். செக்கேமைப் பழிவாங்கியதில் தவறில்லை என நினைக்கின்றனர். யாக்கோபு அதற்கு எதிர்மாறான மனநிலையைக் கொண்டுள்ளார்; தனது புதல்வர்களின் செயலால் தனது குடியிருப்புக்கு பங்கம் வந்துவிடும் என நினைக்கின்றார். தீனாவை செக்கேமுக்கு மணமுடிப்பதன் வழியாக அவர்கள் அமைதியாக அங்கே வாழமுடியும் எனக் கருதுகின்றார். இவ்வியர்களின் எண்ணிக்கை அதிகம். யாக்கோபு அவர்களுடன் சண்டையிட்டு வெற்றிபெற முடியாது. மேலும் அவர் அங்கே குடியிருப்பதற்கென நிலமும் வாங்கிவிட்டார். அவர்களுடன் அமைதியுடன் வாழ்வதுதான் நல்லது என நினைக்கிறார். ஆணாதிக்கம் அதிகமாக இருந்த சமுதாயத்தில் தீனாவின் கருத்து எதிலும் கேட்கப்படவில்லை. அவளது உணர்வுகள் மதிக்கப்படவில்லை.

யாக்கோபின் நிலைப்பாட்டிலும் அவரது புதல்வர்களின் நிலைப்பாட்டிலும் முரண்பட்ட மதிப்பீடுகளைக் காண்கிறோம். குடும்பத்தின் எதிர்காலத்தை எண்ணி சமரசமாகச் சென்றுவிட யாக்கோபு விரும்புகிறார். குடும்பத்தின் எதிர்காலத்தைவிட குடும்பத்தின் மானத்தை முக்கியமானதாக யாக்கோபின் புதல்வர்கள் எண்ணுகின்றனர். எதுசரி? யாக்கோபின் நிலையா? அவரது புதல்வர்களின் நிலையா? ஒருமுடிவுக்கு வருவது மிகவும் கடினம். இன்றுநாம் வாழும் சமூகத்தில் கௌரவக் கொலைகள் பற்றி அதிகமாகக் கேள்விப்படுகிறோம். சாதியின் பெயரால், மதத்தில் பெயரால், இன்னும் பல்வேறு காரணங்களால் கௌரவக் கொலைகள் நடத்தப்படுகின்றன. ஆவை சரியா, தவறா என்ற விவாதங்கள் தொடர்ந்து நடந்து கொண்டேதான் இருக்கின்றன. சட்டத்தின் முன் இது தவறு என்று தெரிந்தும் கௌரவக் கொலைகளை நடத்துபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். யாக்கோபின் புதல்வர்கள் செய்த செயல்களும் தங்கள் கௌரவத்தை நிலைநாட்டுவதற்காகச் செய்யப்பட்ட செயல்கள். விவிலியம் யாக்கோபின் சிந்தனைகளுக்குத்தான் ஆதரவு கொடுக்கிறது. தவறு செய்தவர்களையும் மன்னித்து ஏற்றுக் கொள்வதுதான் விவிலியப் படிப்பினையாக உள்ளது.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ்** CMF





# மறையுரை


அருட்பணி. **ராபர்ட்**
உதவி பங்குத்தந்தை,
**புனித பெரிய அந்தோணியார் திருத்தலம்**
மாரம்பாடி, திண்டுக்கல்.


## பெந்தக்கோஸ்து ஞாயிறு

05-06-2022

# இயக்கும் ஆவி



ஒன்றை இயக்க உயிர் தேவை. அந்த உயிரோட்டம் இருந்தால் தான் இயக்கம் முழுமை பெறும். பலருக்கும் பல வகையானது உயிராக இந்த காலக்கட்டத்தில் இருக்கிறது. குழந்தைகளுக்கு வீடியோ கேம்ஸ் உயிராக இருக்கிறது. இளைஞர்களுக்கு அலைபேசி உயிராக இருக்கிறது. பலருக்கு பணம் உயிராக இருக்கிறது. அரசியல்வாதிகளுக்கு ஓட்டு உயிராக இருக்கிறது. நோயாளிகளுக்கு மருத்துவரே உயிர். சிலருக்கு இசையும் பாடலும் உயிர். இவர்கள் அனைவரும் இவைகள் தான் நம்மை இயக்குகின்றன என வாழுகின்றன. இவர்கள் அனைவருமே இவர்களுக்கு வெளியில் இருக்கின்ற பொருட்கள் மற்றும் நபர்கள் தான் தங்களை இயக்குகின்றன என நினைத்து அகத்தில் உறையும் தூய ஆவியை மறந்துவிடுகின்றனர். ஆனால் அந்த உன்னத ஆவியை நம்மை இயக்குகின்றன என பல வேளைகளில் நாம் மறந்து விடுகின்றோம்.

திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் ஏழு முறையும் புதிய ஏற்பாட்டில் ஆறுபத்து ஏழு முறையும் தூய ஆவியின் பிரசன்னம் குறிப்பிடப்பட்டிருப்பது நாம் அறிந்ததே. எங்கும் இருக்கின்ற எல்லாத்தையும் இயக்குகின்ற தூய ஆவியை தொ. நூ 1:2-ல் நீர்த்திரளின் மீது அசைவாடுவதை காண்கின்றோம். அங்கு தூய ஆவியின் பிரசன்னம் இயங்கி கொண்டிருக்கிறது. தொ. நூ 2:7-ல் கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை இயக்கி அவன் நாசியில் உயிர்மூச்சை ஊத அவன் இயங்க ஆரம்பிக்கின்றான். தூய ஆவியை குறிக்கும் இச்செயல்கள் சொற்கள் அனைத்தும் இயங்கும் தன்மை கொண்டதாக இருக்கிறது. மூச்சு என்ற சொல் எபிரேயத்தில் ரூவா என்று அழைக்கப்படுகின்றது. கிரேக்க மொழியில் நூமா என்று அழைக்கப்படுகின்றது. இறைவன் தந்த தூய ஆவியானவர் மூச்சாக இருந்து மனிதர்களை இயக்குகின்றார் என்பதே இதன் பொருள்.

உரோ 8:26-ல் பவுலடியார் கூறுகிறார் தூய ஆவியார் நம்முடைய வலுவற்ற நிலையில் நமக்கு துணையாக இருக்கிறார் எனக்கூறப்படுகிறது. காரணம் நாம் எவ்வாறு இறைவனிடம் பேச வேண்டும் எனத்தெரியாது. அந்நேரத்தில் தூய

ஆவியானவர் சொல்வடிவம் பெறுகிறார். நம்முடைய பெருமூச்சின் வழியாக தூய ஆவியானவர் பேசுகிறார்; இயங்குகின்றார். இவ்வாறாக வாழ்வளிப்பவராக நம்;மை இயக்குபவராக தூய ஆவியானவர் மாறுகிறார். அப்படிப்பட்;ட தமத்திரித்துவத்தின் மூன்றாம் ஆளாகிய தூய ஆவியை நினைவுகூறும் இன்னாளில் நம்மிடம் இருக்கக்கூடிய நம்மை இயக்கக்கூடிய தூய ஆவியானவர் நம் வழியாக பிறரை இயக்குகின்றாரா? அல்லது அத்தூய ஆவியை இயக்கவிடாதவர்களாக நாம் வாழுகின்றோமா என சிந்திக்க அழைக்கப்பட்டு இருக்கிறோம்.

இன்றைய முதல் வாசகத்தில் பார்க்கின்றோம். திரளான மக்கள் தங்கள் சொந்த மொழியில் அவர்கள் பேசக் கேட்டு குழப்பமடைந்தனர். எவ்வாறு ஒரு மொழி அவரவர் சொந்த மொழியில் ஒலித்தது. இங்கு அனைவரையும் இயக்கியது யார்? திருஅவையின் பிறந்தநாள் இன்று. அத்திருஅவையை இயக்கக்கூடியது தூய ஆவி. அத்தூய ஆவி இயக்கும் அனைத்தும் ஒன்றாக தான் இருக்கும். அத்தூய அவியால் இயக்கப்படுகின்ற நாம் ஒன்றானவர்களாக பிறரை ஒன்றாக்குபவராக இருப்போம். இதன் வழியாக நாம் சிறப்பிக்கின்ற தூய ஆவி பெருவிழாவானது அர்த்தம் பெறும். ஆமென்.

மூன்றாவதாக விண்ணகம் செல்லுகிற ஒரு புதிய வழியை அவர் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். அப்படியென்று சொன்னால் அந்த விண்ணகம் செல்லுகிற புதிய வழி என்ன என்று பார்க்கிற பொழுது கிறிஸ்துவோடு உள்ள சிலுவையை நாம் உற்றுநோக்க வேண்டும்.

இரண்டாவதாக கிறிஸ்து இல்லாத கல்லறையை நான் பார்க்கவேண்டும் இந்த இரண்டையும் பார்த்து அவரை நம்பி அவர்பின் செல்லுகிறபொழுது அந்த விண்ணகம் செல்லுகிற அந்த புதிய வழியை நமக்கு அவர் காட்டுகிறார் திறந்து வைக்கிறார் என்பதை சுட்டிக்காட்டுகிறது இந்த விண்ணேற்றமானது அவர் இருக்கிற இடத்திற்கு நாமும் மேலே ஏறிச் செல்வோம் என்கிற ஒரு நம்பிக்கையை கொடுக்கிறது. அவர் மேலே ஏறிச் செல்கிறபொழுது இறையாசியை வழங்கியவாறு சென்றார். ஏன் என்று சொன்னால் அவர் சிலுவையிலே மரித்தார், உயிர்த்தெழுந்தார் கல்லறையிலிருந்து என்பதை மோயீசன் இறைவாக்கு நூல்கள், திருப்பாடல்கள் இவற்றை சுட்டிக்காட்டுகிறது. அவர் விண்ணேற்படைய வேண்டும் அதற்காகத்தான் அந்த சீடர்களுக்கு தோன்றி அவர்களை வலுப்படுத்தி அவர்களை அனுப்பி வைத்து இந்த உலகம் முழுவதும் ஆசி வழங்குகிற ஒரு ஆற்றலை அவர்களுக்கு கொடுத்தார் ஒரு சாதாரண அற்ப மனிதனுக்கு இறைவ வல்லமையைப்பெற்றுத் தருகிற ஆசை அவர் கொடுத்தார் அந்த ஆசீர்வாதத்தை அவரிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளுகிற பொழுது விண்ணகம் செல்கிற வழியை அவர் நமக்கு காண்பிக்கிறார் என்பதை மறந்துவிடக்கூடாது. திருவருட்சாதனங்களில் பங்கேற்கும் போது நாம் அவரை காண்கிறோம், அவருடைய பிரசன்னத்தை உணர்கிறோம், அவரை உணவாக உட்கொள்கிறோம், பெலனடைகிறோம் என்பதை உணர்ந்தவர்களாக நாம் அவரோடு விண்ணேற்படைவோம் என்கிற நம்பிக்கையோடு ஒரு நாள் விண்ணக வான்வீட்டிலே அவரோடு மகிழ்ந்திருக்கிற அருளையும் ஆற்றலையும் கேட்டு இப்பலியிலே மன்றாடுவோம்.

ஆமென்





# பெந்தக்கோஸ்து ஞாயிறு

**தி.ப.2:1-11, உரோ.8:8-17, யோவா. 14:15-16, 23-26**

**05-06-2022**



**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்று, அவரது அருங்கொடைகளால் ஆட்கொள்ளப்பட்டு, கடவுளின் மக்களாய், கிறிஸ்துவின் பங்காளி களாய், தூய ஆவியானவரின் ஆலயங்களாய் வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் தூய ஆவியானவரின் பெருவிழா வழி பாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்று தாய் திருச்சபையானது தூய ஆவியானவரின் பெருவிழாவினை பெருமகிழ்வோடு கொண்டாடி மகிழ நம்மை அழைக்கிறது. இன்றைய தினத்தை இயேசுவின் உடலான திருச்சபையின் பிறந்த நாளாகவும் கொண்டாடி மகிழ்கிறோம்.

தூய ஆவியானவர் ஒவ்வொரு வருக்கும் ஆற்றலைத் தருவது மட்டுமல்லாமல் துணையாளராகவும், ஆசானாகவும் இருந்து வழி நடத்து கிறார். கடவுளின் அன்பு தூய ஆவியார் வழியாகவே பொழியப்படுகிறது என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

காற்று உயிருக்கு அடையாளம், நெருப்பு தூய்மைக்கு அடையாளம், நாக்கு பேச்சுக்கு அடையாளம். இம்மூன்றின் அடையாளமாய் இருப்பவர்தான் தூய ஆவியானவர். இறைவன் மனிதனுக்கு அளித்த கொடைகளில் சிறந்த கொடை தூய ஆவியே.

திசை மாறிச் செல்லும் மனிதனை நல்வழிப்படுத்தி இயேசுவிடம் அழைத்துச் செல்லும் மகத்தான பணியை செய்பவராக, கடவுளோடு நம்மை ஒருங்கிணைக்கும் ஒருங் கிணைப்பாளராக இருப்பவர்தான் தூய ஆவியானவர்.

தூய ஆவியானவர் நமது உள்ளத்தில் எழுந்தருளி வந்து, நம் உள்ளத்தைப் புனிதப்படுத்தி நம் வாழ்வை பண்படுத்தி கடவுளின் மக்களாய் வாழ இறை வனது திருவருளை வேண்டி இத்திருப் பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

இயேசு விண்ணேற்றமடைந்தபின், என்ன செய்வது என்று தெரியாமல் கலங்கிய நிலையில் உடைந்துபோன உள்ளத்தோடு பூட்டிய அறையில் முடங்கிக்கிடந்த மரியா மற்றும் திருத்தூதர்கள் மேல் பிளவுண்ட நா வடிவில் தூய ஆவியானவர் இறங்கி வந்த நிகழ்வை இன்றைய முதல் வாசகம் காட்சி படுத்துகிறது. ஆவியானவரின் வருகை யால் என்னென்ன அற்புதங்கள் அங்கே அரங்கேறின என்பதை விவரிக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இன்றைய இரண்டாம் வாசகத்தில் பவுலடியார், யார் கிறிஸ்தவர் அல்லாதார் என்றும், யார் கடவுளின் மக்கள் என்றும் எதிர்மறையிலும் நேர்மறையிலும் எடுத்துச் சொல்லுகிறார். நாம் கிறிஸ்துவின் பங்காளிகள் என்ற மிக உயர்ந்த குடும்ப உறவை நினைவூட்டும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) திருத்தூதர்களுக்கு ஆற்றலையும் கொடைகளையும் தந்து திருஅவையை நிறுவிய அன்பு இறைவா, உம் திரு அவையை கட்டிக் காத்து வழி நடத்தும் திருஅவையின் தலைவர்களுக்காக மன்றாடுகிறோம். உம் தூய ஆவியாரின் வழியாக அனைத்து வரங்களையும் அவர்கள் மீது பொழிந்தருளும். அவர்கள் ஆற்றலுடனும், ஆர்வத் துடனும், ஆரோக்கியத்துடனும் இறை யரசுப் பணிகளை சிறப்புடன் ஆற்றிட அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) அன்புத் தந்தையே இறைவா எங்களது ஒவ்வொருவர் உள்ளத்திலும் உமது தூய ஆவியானவர் தங்கி ஆற்றலுடன் செயலாற்றி வருகிறார் என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து நம்பிக்கையுடன் செயல் படவும், துன்ப துயரங்கள், நோய் நொடிகளில் இருந்து முற்றிலுமாக விடுபட்டு நலமுடன் வாழவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) கருணையும் இரக்கமும் நிறைந்த இறைவா, எம்மை வழி நடத்தும் அரசியல் தலைவர்களை ஆசீர்வதியும். மக்கள் நலத்திட்டங்களை உருவாக்கும் எண்ணங்களை அவர்களுக்குத் தாரும். அவர்களின் உள்ளத்தில் உம் அன்புத் தீயை மூட்டும். சமூக நீதி, சமத்துவம், மத நல்லிணக்கம் போன்ற நற்குணங்களைக் கொண்டு நாட்டை ஆள அவர்களுக்கு வேண்டிய ஆற்றலை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) அன்பு இறைவா, உயர் கல்வி படிப்பை முடித்து தங்களது எதிர் கால வாழ்வுப் பாதைகளைத் தீர்மானிக்கும் நிலையில் இருக்கும் எம் இளைய சமுதாயத்தை உம் திருக்கரங்களில் ஒப்படைக்கிறோம். அவர்கள் தூய ஆவி யாரின் துணை கொண்டு நல்ல எதிர்காலத்தை தீர்மானிக்க அவர் களுக்குத் தேவையான ஞானத்தையும் ஆற்றலையும் தந்தருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கின்றோம்.

## எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய
## இரட்சணிய மனோகரம்



**சிறந்த வேதநற் செம்பொருள்**
**அறிந்தி டற்கென் அகத்தினைத்**
**திறந்து வைத்தருள் சிலுவைமீது**
**இறந்து யிர்த்தஎன் யேசுவே.**



*இயேசுவே! சிலுவையில் அறையப்பட்டு, உயிர் நீத்தீர். ஆனால் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தீர். இயேசு பிரானே! உம் மேன்மை யான புகழ் நிறைந்த திருமறையினை நான் மனத்தால் நன்றாக அறிந்து போற்றுமாறு நீவிர்தான் எனக்கு அருள் வழங்க வேண்டும்.*



# வத்திக்கான் செய்திகள்

### குடும்பம், அன்றாட வாழ்வில் கடவுளை நோக்கிச் செல்வதற்கு ஒரு வழி.

கிறிஸ்தவக் குடும்பங்கள், தங்களின் அன்பை, தெளிவான அடையாளங்களால் வெளிப்படுத்தவும், தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவும், அன்றாட வாழ்வில் கடவுளின் இருப்பைக் கண்டுணரவும் திருத்தந்தை அழைப்புவிடுத்துள்ளார்.

உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவக் குடும்பங்கள், நிபந்தனையற்ற அன்பை உள்ளுணர்ந்து அனுபவிக்கவும், தங்கள் அன்றாட வாழ்வில் புனிதத்தில் முன்னேறவும் வேண்டும் என்று இந்த ஜூன் மாதத்தில் மன்றாடுவோம் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

### உயிரைக் காப்பாற்ற வேண்டியது முக்கியம்

உடல் ஆரோக்கியம் என்பது, கடவுள் கொடுத்த வரம் என்றும், ஆண், பெண் இருபாலரும் அதனைப் பொறுப்புடன் கவனித்துக் கொள்ளுமாறும், உலக புகையிலை எதிர்ப்பு தினத்தன்று அழைப்புவிடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஒவ்வொரு மனிதரின் வாழ்க்கையும், தனித்துவமான மற்றும், மீண்டும் மீண்டும் கட்டியெழுப்பிட முடியாத அளவிற்கு உயர்மதிப்பீடுகளைக் கொண்டுள்ளது என்பது எப்போதும் தைரியமாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும், தான் அனுப்பிய அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

முதியோரும், இளையோரும் உடைந்துபோகக்கூடிய பாத்திரங்கள் போன்றவர்கள், அவர்களைக் கவனத்தோடு பாதுகாக்கவேண்டும் – திருத்தந்தை பிரான்சிஸ்

தொழில்நுட்பமும், நுகர்வும், பயன்பாட்டாளர்கள் மற்றும், நுகர்வோர் என்ற நிலைக்கு நம்மை உட்படுத்தியுள்ளவேளை, இக்காலக்கட்டத்தில் நாம் எதிர்கொள்கின்ற நெருக்கடி, மனித சமுதாயத்திற்குப் புதியதோர் அர்த்தம் கொடுக்கும் முறையில், நற்செய்தியை புதியவழியில் அறிவிப்பதற்கு ஒரு வாய்ப்பாக மாறியுள்ளது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

ஜூன் 01, இப்புதன் காலையில், வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் பொது மறைக்கல்வியுரை நிகழ்வுக்குச் செல்வதற்குமுன்னர், 2019ம் ஆண்டில் தான் ஆரம்பித்து வைத்த, உலகளாவிய கல்வி உடன்படிக்கையை வளர்ப்பது குறித்த பன்னாட்டு கருத்தரங்கில் பங்குகொள்வோரைச் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, ஒரு நெருக்கடியானது, புதிய பாதையில் செல்வதற்கு மக்களுக்கு எவ்வாறு தூண்டுதலாக மாறுகிறது என்பது பற்றி எடுத்துரைத்தார்.

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## பெந்தக்கோஸ்து ஞாயிறு

**05.06.2022 – ஞாயிற்றுக்கிழமை**
**பெந்தகோஸ்து ஞாயிறு**
முதல் வாசகம் : திப. 2 : 1-11
இரண்டாம் வாசகம் : உரோ. 8 : 8-17
நற்செய்தி வாசகம் : யோவா. 14: 15 -16, 23-26

**06.06.2022 – திங்கள்கிழமை**
முதல் வாசகம் : 1 அர. 17 : 1-6
நற்செய்தி வாசகம் : மத். 5 : 1-12

**07.06.2022 – செவ்வாய்கிழமை**
முதல் வாசகம் : 1 அர. 17: 7-16
நற்செய்தி வாசகம் : மத். 5 : 13-16

**08.06.2022 – புதன்கிழமை**
முதல் வாசகம் : 1 அர. 18 : 20 - 39
நற்செய்தி வாசகம் : மத். 5 : 17-19

**09.06.2022 – வியாழக்கிழமை**
முதல் வாசகம் : 1 அர. 18 : 41-46
நற்செய்தி வாசகம் : மத். 5 : 20-26

**10.06.2022 – வெள்ளிக்கிழமை**
முதல் வாசகம் : 1 அர. 19 : 9அ, 11-16
நற்செய்தி வாசகம் : யோவா. 21 : 15-19

**11.06.2022 – சனிக்கிழமை**
முதல் வாசகம் : 1 அர. 19 : 19-21
நற்செய்தி வாசகம் : மத். 5 : 33-37



**Bethlehem**
was
God with Us,
**Calvary**
was
God for us,
and
**Pentecost**
is
God in us.

- Robert Baer -




## ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம் படுபாக் கறிந்து.

| அதிகாரம் 14 |
|---|
| ஒழுக்கமுடைமை |
| குறள் – 136 |

**பொருள் :** மன உறுதி கொண்டவர்கள் ஒழுக்கம் தவறுவதால் ஏற்படும் இழிவை உணர்ந்திருப்பதால் நல்லொழுக்கம் குன்றிடும் அளவிற்கு நடக்க மாட்டார்கள்.

23 எலயாசர் மகன் பினகாசு மாட்சியின் மூன்றாம் நிலையில் இருப்பதாகவும், மேலும் ஆண்டவருக்கு அஞ்சி நடப்பதில் பேரார்வமிக்கவராய் இருந்தார் எனவும், ஆண்டவரைவிட்டு மக்கள் விலகிச் சென்றபோது இவர் நன்மனத்தோடு அவரை உறுதியாய்ப் பற்றி நின்றதாகவும், இஸ்ரவேலுக்காகப் பாவக் கழுவாய் பினகாசு செய்த்தாகவும் நமக்கு திருவிவிலியம் எடுத்துரைக்கிறது. (சீராக் 45:23)

இஸ்ரயேல் சித்திமில் தங்கியிருந்தபோது மக்கள் மோவாபின் புதல்வியரோடு முறைகேடாக நடக்கத் தொடங்கினர். அவர்கள் தங்கள் தெய்வங்களின் பலிகளில் பங்கேற்க மக்களை அழைத்தனர்; மக்கள் உண்டு அவர்கள் தெய்வங்களைப் பணிந்து வணங்கினர். இங்ஙனம் இஸ்ரயேல் பாகால்பெகோரை அடிபணிந்தது; எனவே ஆண்டவரின் சினம் இஸ்ரயேலுக்கு எதிராக மூண்டது.

ஆண்டவர் மோசேயிடம், ‘மக்களின் தலைவர்கள் அனைவரையும் கொண்டு வந்து பட்டப்பகலில் ஆண்டவர் முன் தூக்கிலிடு. அதனால் ஆண்டவர் கடுஞ்சினம் இஸ்ரயேலை விட்டு நீங்கும்‘ என்று கூறினார்.

மோசே இஸ்ரயேலின் தலைவர்களிடம், ‘உங்கள் ஒவ்வொருவரும் பாகால் பெகோரை அடிபணிந்த தம் ஆள்களைக் கொன்று விடுங்கள்‘ என்றார்.

மேலும் இஸ்ரயேல் மக்கள் சந்திப்புக் கூடார வாயிலில் அழுது கொண்டிருந்தபொழுது அவர்களில் ஒருவன் மிதியானியப் பெண்ணொருத்தியைத் தன் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்தான்; இது மோசேயின் பார்வையிலும் இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பிலுள்ள அனைவர் பார்வையிலும் நடந்தது.

குரு ஆரோன் மகன் எலயாசரின் புதல்வன் பினகாசு இதனைப் பார்த்ததும் அவன் மக்கள் கூட்டமைப்பை விட்டு எழுந்து தன் கையில் ஓர் ஈட்டியை எடுத்துக் கொண்டான். அவன் அந்த இஸ்ரயேல் மனிதனின் பின்னே உள்ளறைக்குச் சென்று அந்த இஸ்ரயேல் மனிதனையும் அந்தப் பெண்ணையும் சேர்த்து அவள் வயிறு வழியே ஊடுருவக் குத்தினான். இதனால் இஸ்ரயேல் மக்களிடையே கொள்ளைநோய் அகன்றது.

எனினும் அக்கொள்ளை நோயால் இறந்தோர் இருபத்து நான்காயிரம் பேர். (எண். 25:1-9)

ஆண்டவர் மோசேயிடம் கூறியது;குரு ஆரோன் மகன் எலயாசரின் புதல்வன் பினகாசு இஸ்ரயேல் மக்களிடமிருந்து என் சினத்தை அகற்றி விட்டான்; நான் அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின் வெறியை அவனும் காட்டிவிட்டான்; ஆகவே என்

பேரார்வத்தால் இஸ்ரயேல் மக்களை நான் முற்றிலும் அழித்து விடவில்லை.

எனவே நீ சொல்ல வேண்டியது; ‘இதோ என் நல்லுறவு உடன்படிக்கையை அவனுக்குக் கொடுக்கிறேன்; அது அவனுக்கும் அவனுக்குப் பின் அவன் வழித்தோன்றல்களுக்கும் நிலையான குருத்துவத்தின் உடன்படிக்கையாயிருக்கும்; அவன் தன் கடவுள் மீது பேரார்வம் கொண்டிருந்ததால் இஸ்ரயேல் மக்களுக்காகக் கறை நீக்கம் செய்தான்.

மிதியானியப் பெண்ணுடன் சேர்த்துக் கொல்லப்பட்ட இஸ்ரயேலன் பெயர் சிம்ரி; இவன் சிமியோன் குலத்தைச் சார்ந்த மூதாதையர் வீட்டுத் தலைவனான சாலூவின் மகன்; கொல்லப்பட்ட அந்த மிதியானியப் பெண்ணின் பெயர் கோசுபி; இவள் மிதியானில் மூதாதையர் வீடொன்றுக்குத் தலைவனான சூரின் மகள். (எண்ணிக்கை 25:10-15)

ஒழுக்கத்தில் உறுதியாக நிற்பவர்கள் தங்கள் மட்டுமல்ல; தங்கள் இனத்தையே காப்பாற்றக் கூடிய மனவலிமையையும் பெற்றிருப்பார்கள். எண்ணிக்கை நூலில் சொல்லப்பட்டது போல இன்றும் நடந்துகொண்டிருக்கிறது பெண்களால் எத்தனையோ பாவங்கள் வந்து சேர்ந்துக் கொண்டிருக்கின்றன. பலர் பெண்களை போதைப் பொருள்களாகவே பார்க்கின்ற நிலை இன்று வரை நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. மட்டுமல்லாமல் பெண்கள் தங்கள் சூழ்நிலைகளாலும் அல்லது ஆடம்பரத்தை விரும்புவதாலும் துன்பங்களும், பாவங்களும் வந்து இவ்வுலகில் குவிந்து கொண்டுதான் இருக்கின்றன.

மன உறுதி மற்றும் ஒழுக்கம் இவை கடவுளிடத்திலிருந்து வருகின்றவை. கடவுளிடம் உண்மையான அன்பும், பற்றும் வைத்திருப்பவர்கள் ஒழுக்கத்தில் நிலைத்து இருப்பார்கள். அப்படி இருக்கும் பொழுது ஆண்டவர் அவர்களுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொள்கிறார். அப்படிதான் பினகாசுடன் ஆண்டவர் அமைதி உடன்படிக்கை செய்துகொண்டு அவரை திருவிடத்துக்கும், தம் மக்களுக்கும் தலைவராக்கினார். அவருக்கும், அவருடைய வழிமரபினருக்கும் குருத்துவத்தின் மேன்மை என்றும் நிலைக்கும்படி செய்தார்.

நீதிமான்கள் தங்களைத் துன்புறுத்தியோர் முன்பும் தங்கள் உழைப்பைப் பொருட்படுத்தாதோர் முன்பும் துணிவோடு நிற்பார்கள்.; இறைப்பற்றில்லாதவர்கள் அவர்களைக் கண்டு பேரச்சத்தால் நடுங்குவார்கள்; எதிர்பாரா வகையில் அவர்கள் அடைந்த மீட்பைப்பற்றித் திடுக்கிடுவார்கள். சாலமோனின் ஞானம் (5:1,2)

ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து மனவலிமை உடைய சான்றோர் ஒழுக்கத்தில் தவறாமல் காத்துக் கொள்வர்.

*இயேசுவுக்கே புகழ்*

**–லீமா விக்டோரியா**

